ஸ்ரீதசரதராமஜெயம்.

இராமாயணத்

திருப் [illegible] ழ் காவடிச்சிந்து.



விஜயபுரம் வித்வான்

வெ. நா. சபாபதிப்பிள்ளை அவர்கள்

இயற்றி,

மதுரைத்தமிழ் வித்வான்

ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்

புதிப்பித்தது.

...வணிமூலவீதி, புத்தகவியாபாரம்

...பிக் கோனாரவர்களால்

...ல்ஸியர் பிரசில் பதிப்பித்தது.

1922.

...டேங்கும் புகழ்பெற்று...

ஸ்ரீமான் ...ங்கரதாஸ் சுவாமி...

...ணுக்கர்களிலொருவரான

...ந்தச் சரப . ஷண்முகதாஸவர்களியற்றிய

பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்.

நண்பர்களே! கவனியுங்கள்! ...வனியுங்கள்!! இது ஒரு புதுமுறையான தமாஷ்! தமாஷ்!! எல்லா... மாஷான பாடல்கள் இதுவே நிந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள். ...தியை வேண்டிப் பக்தி புரிவோர்க்கு முதன்மையான பாட... ...லோல வள்ளி கோலாகலமாய் வேலவனோடு ஊசலாடுகையில் ஏசல் ப... ...து போல் காலநாகரிகத்துக்குச் சாலவும் பொருத்தமாய்ச் ...துக் கொண்டு, சிவன் விளையாட்டை விரித்து... கூறும் விநோதப் பாடல்கள். "பக்கத்திருப்பவர் கெக்கெக்கென்று சிரிக்கச்செய் விகடக்கற்கண்டெனும்" விகடமே ...றைந்த விசித்திரப்பாடல்கள். பாடலிற்சிறந்த நாடகத்தார்க்கும் பயன்தரும் பாடல்கள். இன்பம் பயக்கும் இந்துஸ்தான், கவாய், தில்லானா, டப்பா, மெட்டுகளில் சிறந்த பாடல்கள். சிந்தைக்கினிய செந்தமிழ்கமழும் சந்தப்பாடல்கள் நிறைந்த இப்பக்தி ஆனந்தக் கேலிப்பதங்கள் படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சி மிகுக்கவும் ஒருங்கு கிரட்டிப் புதியாயச்சிட்டு வெளிவந்திருக்கின்றன படிக்கப்படிக்கத் தெவிட்டாது திரும்பத்திரும்பப் படிப்பதன்றிக் கீழே வைக்க மனம் வராதென்பது திண்ணம்! திண்ணம்!! சொற்பக் காப்பிகளே தயாரிலிருக்கின்றன. விலை அணா 5.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

டிராமாச் சரித்திரங்கள்.

வெளியாகி விட்டது! 12-ம் ஒரே புத்தகம் வெளியாகி விட்டது!

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தகம்.

முந்துங்கள் புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்ரம், அல்லியாசாணி சரித்ரம், மயில்ராவணன் சரித்ரம், மதுரைவீரன் சரித்ரம் துரோபதைவஸ்திராபஹரணம், கீசகசம்மாரம், புதிய வர்ணமெட்டு பார்ஸி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்ரம் முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்ந்தது.

தற்கால நாகரிக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றது. விலை ரூ 1-4-0.

தியாகராஜ சோதிட ஆனந்...

சோதிடங் கற்றுப்பலன் சொல்ல... ...சியமான புத்தகம். இப்புத்தகத்தை... ...விதமான ஜாதகங்களுக்கும் ,12-பா... பலன் கூறலாம். விலை அணா 6.

உ

ஸ்ரீதசரதராமஜெயம்.

இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து.

1022
1.22
OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS
3 - MAR 1922

வெண்பா.

ஆதி யொருமூல மானதிரு மாலேனின்
சோதி குணமகிமை சொற்றிடவே—நீதிசேர்
மாருதிமுன் னேமருவ மைந்தனெனைக் காத்திடநல்
வாருதியே வந்தருள்செய் வாய்.

விநாயகர் துதி.

திருமால் மருமகனே என்ற மெட்டு.

உமையாள் திருமகனே சிவகெஜனே அருள்பரனே மறை
அமையாமகிழ் தனமே எனக் கருளும் வரம்பலமே (உமை)

கந்தர்மனக் கவலையறக் காட்டில் கரிமதமாய்
வந்தமறை முடிவேவேதம் வாழ்த்தும் தந்திமுகனே (உமை)

கிரியைவலம் க்ஷணமேவந்த கிருபாகரப் பொருளே
நரியைப் பரியாக்கிவைத்த நாதர்பெற்ற அருளே (உமை)

ஔவைக்கருள் தந்து க்ஷணம் அவள் முன் னெதிர்பேசி
சைவச்சிவ மணியாய்நின்ற தந்திமுகக் குருவே (உமை)

மாதுகந்த வல்லபையின் மாபுகழ் மணாளா
தீதகற்றி நெஞ்சமதில் சேரும் கணராஜா (உமை)

175897

ஆஞ்சநேயர் துதி.

விருத்தம்.

மூலமந்திரத்தைக் கற்க மூன்றுநாள் கதிரோனோடு
ஆலமே சுற்றிவந்த அஞ்சனா தேவிமைந்தா
நீலமாமேகவர்ணன் நேர்மையால் இலங்கையில் நீ
தூலமாதேகத்தோடு தோன்றி ராக்ஷதர்கள் மாளக்
கோலமா மாடமாளி கோபுரமதில் தீயிட்டுச்
சாலவே திரும்பிவந்த சாமி மாருதியெங் காப்பாம்

சிவசுப்பிரமணியர் துதி.

திருப்புகழ்.

திருநாறுகாலம் கருவாயமைந்து
உருவே எடுத்துப் புவிமேலே
திகழாயமைந்து அழகேமிகுந்து
திருநாமமற்று உறவாகி
குருவாயமைந்த மயில்வீரசிங்க
முருகாவெனச்சொல் மொழியாமல்
வெறியாகமங்கை பரிகாசமிஞ்சி
மெலிவேபுகன்று உடல்மாறி
கரியாக தேக மிடுகாடுசெல்லக்
கலிகாலமங்கை உறவாமோ
மருகாவெனுஞ்சொல் இனியேனும்நெஞ்சில்
மறவாதிருக்க அருள்வாயே
திடியான சூர னுடலே துணித்த
மலைமாதுவள்ளி மணவாளா
குறியான தெய்வ முனையே பிடித்தேன்
குணமாகரக்ஷி குருநாதா
சரியான புள்ளி மயில்மீதிலேறி
வரவேணுமென்முன் சமமாக

பிரமாவை வேத முரையாத குற்றம்
சிறையே விதித்த சிவபாலா

சுரமாதுகற்ற தெய்வானையுற்ற
குறியோடெனக்கு மகிழ்தாராய்

திரமான ரெத்ன சிரமாட வாறு
முகமேயடைந்த நிஜவாழ்வே

கரமாடமுத்து வடமாட நின்ற
கதிர்காம சோலை வடிவேலா

சிவகாமவல்லி அணையின் றெடுத்த
திருவேரகத்தி லுறைவோனே

சபையேறிஆடி நடனம்பொழிந்த
சபாபதிபெற்ற புதல்வோனே

மகாவிஷ்ணு துதி.

சென்னிகுளநகர்வாசன் என்ற மெட்டு.

பண்டரிவாழ்சங்குசக்ரன் தாசர் பாதம்பணியுறும்நிக்ரன்
ஜெக பாரை யோரடி யாலளந்தவன்
சீரைநேரடி கூறஎண்ணினன்
பக்தி அருள் முக்தி

மத்தகெஜம்மடுசெல்ல காலும் வக்கராவாய்தனில்கொள்ள யானை
ஆயிரமாயிர மாண்டு வாவுறமுணவிலாது
ஆதிமூல மெனக்கூவ
உடன் ஆதரித்தீர் எதிர்மேவ

பாண்டவர்பெண்டுபாஞ்சாலி சபை பங்கமறக்காத்தீர்நாளில்
துயில் பர்வதமாய் இடையிலுற சர்வர்களு மகமகிழப்
பார்புகழ் கிருஷ்ணன் போல் வந்தீர் கூடப்
பாண்டவர்க் கபயம் தந்தீர்

விஜயபுர நகர்வாசன் துதி போற்றும்சபாபதிதாசன்
பாடும் ராமாயணச் சிந்துக்வி சங்கமென ஆழ்ந்திடவே
நேர்ந்தெனை ஆதரித்தருள் ராமா எனைச்
சார்ந்து துணையாய் வருவீர் சோமா

பாலகாண்டம்.

விஸ்வாமித்திர மகரிஷி தன்னுடைய வேள்வி முடிப்பதற்காகத் தசரதச் சக்கிரவர்த்தியிடம் வந்து ஸ்ரீராமரைத் தாவென்று கேட்கிறார்.

தோடி சரிய மயிரே என்ற திருப்புகழ் மெட்டு.

தக்க ஒருகி ரீடனே வதிட்டமுனி
பக்க மருவு சீடனே அரக்கருக்காய்ச்
சம்பரனைக்கொல் நீடனே தசரத நின்-புகழ்வாழி

தசரதன்.

சக்ர உலக மிசையே தவத்திலொரு
மிக்க மகிப முனியே வருகவினி
தங்கு பெருமை யுறவே அடியனெனக்- கருள்வாயே

விஸ்வாமித்திரர்.

மெத்தக் கொடுமை யுடன்தா டகையெனுமொர்
ஊத்த வரக்கி யிருதா மெனது தவ
வித்தை யழிந்து கெடவே தவறுபல- புரிவாளே

தசரதன்.

சித்தம் மகிழ்க வினியேன் கவலையவள்
புத்தி சிதற வடியேன் ஒரு கணையால்
செத்துமடிய சமரே தொடுவ னுடன்-வருவேனே.

விஸ்வாமித்திரர்.

நத்திய புகழ் பெறவே ஜெயராமனை
இத்ததி துயரறவே எனதுயினர்
நன்றினி வர விடவே அரியவிடை- தருவாயே

தசரதன் விஸ்வாமித்திரரிடம் ஸ்ரீராமன் சிறு குழந்தையானதால் அமர் புரிய வல்லுநனல்லனென்று கேட்டுக்கொள்ளுகிறுன்.

சேந்திமாஙக ரந்தினில் என்ற வர்ணமெட்டு.

எங்கள் மாமுனி புங்கவனே ராமன்
எப்புடியாரண்யஞ் செல்லுவன்- தங்கள்
சொற்படி யாவரை வெல்லுவன்- அவ
னேதுமேயறி யாதபாலக ஞதலானடி யேன்தகாதன
இன்னலேபுரி கன்னியாந்தாடகை
இன்னுயிர் போக்கிடுவேனே- தடை
என்படை தாக்கிடுவேனே (எங்)

விஸ்வாமித்திரர்.

சங்கமேந்திய மங்கள நாரண
தாரகனும் ரகு ராமனே- இந்தக்
காரணங் கண்டறி பூமனே- அந்தத்
தாடகைப்படு பாவிசெய்யும டாதவைக்கொரு காவலோச்சியெந்
தாங்குவேள்வியைப் பாங்குறப்போற்றிடு
சத்தி யவனுக்கே சொந்தமாம்- ஒரு
புத்திர னென்பது பந்தமாம்- (சங்)

வசிஷ்டர் தசரதரிடம் ஸ்ரீராம லக்ஷ்மணரைக் கௌசிகரோடு வனத்துக் கனுப்பும்படி வற்புறுத்துகிறுர்.

கண்ணுயிரம்படைத்த என்ற வர்ணமெட்டு.

பொன்னு ரயோத்தி நகர் மன்ணு நன் நேர்த்தியிலுன்
புத்திர ரைவிசுவா மித்திர ருடன்செலச் செய்குவாய்-செய்தால்
இத்தரை சகலசம் பத்துட னேபுகழி லுய்குவாய்

இன்னல்புரியரக்கர் முன்னில் வலி சிறக்க
இளையவன் ராகவன் சிலையொரு கணையது போதுமே-வெகு
தலையிலு மேனம ருலகிலு மே யிசை யோதுமே

இன்றே புரிக நல மென்றே யறிக நனி
இதிலொரு ரகசிய மதுமுன ரறிவத சாத்யமே-பல
சதிபுரி கொடியர்தம் விதிமுடி வதுமிவர் பாத்யமே

நன்றே புரியத் தவம் நின்றேமலியப் பவம்
நசிவுற நாரண நித்ய பரத்துவன் வந்தனன்-ஒரு
சிசுவென நினதுதி ரத்திலு தித்துப்பி றந்தனன்

விஸ்வாமித்திரர் ராமலக்ஷ்மணருடன் வனத்துக்குச் சென்று தாடகையைச் சம்ஹரித்து, வேள்வி முடித்து மிதிலைக்குச் செல்லுகின்றனர்.

ஆறுமுகவடி வேலவனே என்ற வர்ணமெட்டு.

சூரிய வம்சந்து லங்கப்பி றந்திட்ட சோதி குண நிதியே-இங்கு
தோன்றிய தாடகைச் சம்ஹாரம் செய்திட்ட சூரதீர பதியே
தேரித்தவவேள்விசெய்துமுடிவுறச்செம்மலருள் புரிந்தாய்-நம்மைத்
தேடுஞ் சனகன்தன் தேசம்மிதிலைக்குச் சென்றிடு வோம்விருந்தாய்
கல்லிற் பதம்பட்ட காரணத் தாலொரு காரிகை யானகதை-அந்தக்
கண்ணுயி ரம்பெற்ற காவல னிந்திரன் கற்றச மர்த்தா மிதை
வில்லிற்கணைதொட்ட வேகத்திலுந்தன் வீரத்தையங்குகண்டேன்-ஒரு
மின்னு ளகலிகை மேன்பத விபெற்ற விந்தையை யிங்குகண்டேன்

அயோத்தியா காண்டம்.

ஸ்ரீராமர் வனவாசஞ் செய்யவும், பரதன் அரசாட்சி செய்யவும் நியமித்த செய்தியறிந்த லக்ஷ்மணன் கோபித்துக்கொள்ளுகிறான்.

மருவேசேறித்த என்ற திருப்புகழ் மெட்டு.

ஜயராம னுக்கு நயமாக மிக்கு
ஜகமாளு தற்கு முடியாதோ

சதியேமி குத்த மதியேது இத்த
சரியோவி தித்த விதியீதோ

பயமேது மற்றுச் சுயமாக வுற்றுப்
படிமீது முற்று மரசாளப்

பரதாஉ னக்குத் தரமாபி றர்க்குப்
பரிகாசத் திற்கு மிடமாமே

நிறையாக மத்து முறையாக ஒத்து
நினைவே பொருத்து வகையீதோ

நெறியோவ னர்த்த குறையோ புதித்த
நிகழ்வோச மர்த்து மிதுதானோ

பெரியோனி ருக்கச் சிறியோன்சி றக்கப்
பிதிர்ராஜ்ய மொக்கப் பெறலாமோ

பிணையாதெ திர்த்துக் கணையாற்றொ டுத்துப்
பிணமாக்கு வித்து விடுவேனே

வில்லை வளைத்துச் சரம் விடத் துணிந்த லக்ஷ்மணன் கோபத்தை ஸ்ரீராமர் ஆற்றுவிக்கின்றார்.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற மெட்டு.

என்னருமைத் தம்பிலக்ஷ்மணா-இத்துணைக்கோபம் வைத்திடலாமா
இங்கு வந்த தேன துவீணா- யுன
தெண்ணமுற்றிலும் மண்ணிலிட்டனை
திண்ண முற்றிடா நண்ணி விட்டனை

இப்படித் துணிந்திடலாமா "அன்னைபிதாவும் முன்னறிதெய்வம்"
என்றசொல் மறந்திடப் போமா (என்)

அன்னையல்ல வாநங்கைகேசி-கோபந்தணித்துத்-தாபம்மிகுத்து
ஆத்தி ரப்ப டாமலேயோசி- சரி
அந்தோகமக் கொரு . சிந்தை வருமிதில்
தந்தைவாக்யஞ்சி றந்த மறையதில்
ஆங்க ணுவு மேதவ ருதே-வில்லைப்புயத்து மெல்லப்பொருத்து
ஆர ணியஞ் செல்வ மிப்போதே (என்)

ஆரண்யகாண்டம்.

ஸ்ரீராமர் லக்ஷ்மணரை மகரிஷிகள் எதிர் சென்று வரவேற்றுத் தங்கள் குறைகளைத் தெரிவிக்கின்றனர்.

சரணகமலாலையத்தை என்ற வர்ணமெட்டு.

இரவிகுல னேவருக மருவுகுண னேவருக
இலகுஜய ராம் வருக அவதார

இனியவுரு வேவருக நனியருமை யேவருக
இனிமகிமை யேபெருக அருள்வாயே

அரனயதே வாதியற்கும் பிரணவந ராதியற்கும்
அருமறைத வாதியற்கும் அரிதாய

அமலவெமக் கேதினிமேல் கவலையிலையே புவிமேல்
அரக்கர்பய் மேயொழிய வடுதீரா

எமதுதவம் நீடிடவே அமரர்சுகம் நாடிடவே
இராக்ஷதர்க ளோடிடவே சமராடி

இதுசமயம் நீயருள ஒருதனிவில் லாளியென
இளையபெரு மானுடனே இவண்மேவிக்

கமழுதுறவே யடுத்துப் புகழுமறமே தொடுத்துக்
கருணையரசே விடுத்து வரலானய்

கதியுதவ ஊழியூழி துதிபெறுசி ருமம்வாழி
கடவுளருக் காதியான பெருமானே

ஸ்ரீராமர் தண்டகவன ரிஷிகளுக்குத் தேறுதல் சொல்லி அபயமளிக்கிறார்.

வெள்ளிமலை யொத்த என்ற வர்ணமெட்டு.

நற்றவஞ்சி றந்தபெரி யோரே. சரி
நன்றாநன் றினிமேலிங்கு நீரே சுகம்
நண்ணித்தனி சஞ்சரிக்க விண்ணவர்க்கி தந்தரிக்க
நானே-புரி-வேனே

கொற்றவிற்கோ தண்டமொரு கையே-வைத்துக்
கொண்டுநுங் குறைதவிர்பன் மெய்யே- இங்கு
கோடியில ரக்கர்சேனை கூடினும்பு குந்தென்கணை
கொல்லும்-அறம்-வெல்லும்

இன்றுமுதல் சஞ்சலத்தை விடுங்கள்- உல
கின்புறத்த வத்திலிருந் திடுங்கள்- அரு
கிங்கிருந்தே ராக்ஷதரைச் சங்கரிப்பேன் சத்யஉரை
ஈதே-தவ-றாதே

என்றுமுங்கட் கிந்தஒரு கணையே- வரு
மின்னலைத்த விர்த்துவைக்குந் துணையே- எனக்
கிஷ்டர்களை ரக்ஷிக்கவும் துஷ்டர்களைச் சிக்ஷிக்கவும்
எண்ணம்-இது-திண்ணம்

பன்னகசாலையில் இருந்த ஸ்ரீ ராமரைக் கண்டு சூர்ப்பணகி ஆசைப்படுகிறாள்.

வண்ணத் தினைமாவைத் தெள்ளியே என்ற வர்ணமெட்டு.

மானிடராகவே தோணுது- கையில்
மாவில் மரவுரி காணுது- வன
வாசத்திவர்க் கின்பம் பூணுது- இந்த
மணவாளனோ டினிதாகவே யுறவாடிடு சுகமாகவே
வாழ்ந்திட வென்மனம் பேணுது- சென்று
வார்த்தையிடச் சற்று நாணுது

நானேமுன் செய்திட்ட பாக்கியம்- வந்து
நல்கிய நல்ல வை போக்கியம்- இந்த
நாள்தா னெனக்குச்சி லாக்கியம்- அன்ன
நடையோடொரு ஜெகமோகினி வடிவாயவ ருகோனி
நண்ணியடைவதே யோக்கியம்- அவர்
நாமொழியே வேத வாக்கியம்

சூர்ப்பணகி ஓர் எவ்வண ரூபமுள்ள மங்கையைப்போல் ரூபந்தாங்கி ஸ்ரீராமரருகே செல்ல அவளைப் பார்த்து ஸ்ரீராமர் வினவுகிறுர்.

பாளைவாய்க் கமுகில் வந்தூர் என்ற வர்ணமெட்டு.

ஸ்ரீ ராமர்.

கன்னிமலர்ப் பொன்னிவல்லி மின்னிடைவிற் பன்னிமெல்லி
கண்டுமொழிப் பெண்கொடி நீ யாரடி என்னை
அண்டி நகை கொண்டதென்ன சீரடி

சூர்ப்பணகி.

தென்னிலங்கை மன்னன்தங்கை என்னும்நங்கை இன்னும்மங்கை
தேடியுமை நாடிவந்த காரியம்—கை
கூடநின்று நீடுவதே வீரியம்

ஸ்ரீராமர்.

மங்கையைப்போ லிங்குநின்ருய் சங்கையுற்ருே தங்குகின்ருய்
வஞ்சகிநீ யோரரக்கி யாச்சுதே—இந்தச்
செஞ்சொல்மொழி ரூபமெங்கு வாச்சுதே

சூர்ப்பணகி.

இங்குநின்றி லங்குதவர் புங்கவர்கள் தங்களுக்கு
ஏவல்செய்ய இவ்வுருவ மாயினேன்—எங்கள்
பாவச்செயலை வெறுக்க லாயினேன்

ஸ்ரீராமர்.

நல்லதிங்கென் ஞுனக்கு வல்லதென்சொன் ஞலதற்கு
நானொரு லானகாரியஞ் செய்கிறேன்—நன்மை
தானதுசெய்திட யானிங் குய்கிறேன்

சூர்ப்பணகி.

மல்லிடும்மன் மதபாவி வில்லிடும் கணைகள் தூவி
வாடவிட்டா னோடிவந்தேன் சொல்லவே—மெத்தப்
பாடுபட்டே தேடிவந்தேன் புல்லவே

ஸ்ரீ ராமர்.

சீதையென்ற மாதுதன்ச மேதனவிப் போதமர்ந்தேன்,
சென்றுதம்பி லக்ஷ்மணனைச் சேருவாய்—அவன்
நன்றுனது நாயகனென் னேருவாய்

ஸ்ரீராமர் சொன்னபடி சூர்ப்பணகி அடுத்த வனத்திருந்த லக்ஷ்மணனைச் சந்திக்கிருள்.

செந்திமாநகர்வாழ் என்ற வர்ண மெட்டு.

சூர்ப்பணகி.

மந்தமாருதத்து சொந்தமா வனத்து
மன்றுலாவு துய்யனே— மாவில்
ஒன்றுலாவு கையனே—போரில்
நின்றுலாவு மெய்யனே— இந்த
மாதிங்குன்னைத்தேடிப் போது போக்காடி
வந்தடுத்தே னையனே

லக்ஷ்மணன்.

சுந்தரீயென் முன்னே வந்தகார்ய மென்னே
சொல்லுவாய்நீ யாரடி— ரூப
மெல்லிநீ எந்த ஊரடி—கற்ப
வல்லி என்ன பேரடி—நின்
சோதிப்பாதம்நோக சா திங்கேகமாகத்
தோன்றியதென் சீரடி

சூர்ப்பணகி.

தன்னந்த னிமையாக என்னைநின் னிடமேகத்
*தங்களண்ணன் வாக்கியம்—இனிப்
பொங்கும்போக போக்கியம்— நமக்

* தங்களண்ணன்-நினக்கும், பரதசத்துருக்கனுக்கும் அண்ணன்,

கெஞ்சினுஞ்சி லாக்கியம்—விரக
தாபத்தாலே நொந்தேன் ஆவலோடு வந்தேன்
சாமி இன்றென் பாக்கியம்

லக்ஷ்மணன்.

கண்களா லுருட்டி அங்கமால் மருட்டிக்
கத்துகின்ற தேனடி- கெட்ட
புத்தி யீது தானடி- என்றுஞ்
சத்தியம்மே பேணடி- இந்தக்
காரியம் நீ செய்யத் தேரிணுயிங்கைய
காதல் கொள்ளே ணடி

சூர்ப்பணகி.

செப்பிணு யிங்கட்டி ஒப்புவேனே கிட்டிச்
சீதை தன்னைத் தூக்குவேன்- அண்ட
மோதுமாறு போக்குவேன்- நின்று
பேதலிக்கத் தாக்குவேன்- பத்துச்
சென்னிகொண்ட தீரன் தென்னிலங்கை வீரன்.
செய்ய பாரி யாக்குவேன்

லக்ஷ்மணன்.

தப்பிலைழத்த பாவி இப்பொழுதே மேவி
தாங்குன் மார்பு ரண்டுமே- விழ
வாங்கினேன் வாள் கொண்டுமே- உனக்
கீங்கிழிச்சொ லண்டுமே- இனித்
தற்கமேன் வாய்மூடு பக்கம் வாராதோடு
சார்ந்தா லாபத் துண்டுமே

சூர்ப்பணகி இராவணனிடத்திற் சென்று மூக்கு முலை அறுபட்டதையும், கரதூஷணர் மாண்டதையும் பற்றி முறையிடுகிறாள்.

செந்தூர் வளர்முருக நாதா என்ற மெட்டு.

சூர்ப்பணகி.

அண்ணா ராக்ஷதர் குல வீரா- கயிலையைமுன்
அசைத்துப் பெயர்த்திட்ட கெம்பீரா- உந்தன்
ஆட்சியிலும் யானிவ்விதம் தாட்சியுற்றேனே யநீதம்
ஆனால் நமக்கினியோர் பேரா- ராவணனென்றால்
அனைவருமே நடுங்கி டாரா

இராவணன்.

தங்காய் ஈதென்ன அலங் கோலம்- மனங்கலங்கித்
தவித்திட நேர்ந்ததென்ன காலம்- ஜெய
தாரணி யென் பேரிழிய வாரணி நின்மார் பொழியத்
தறித்தெறிந் தவரெந்த ஞாலம்- சொன்னாலவர்கள்
தலையைத் துணிக்குமிந்தச் சூலம்

சூர்ப்பணகி.

அய்யோத்தி யாமவர்கள் ஊரு- சின்னஞ்சிறுவர்
அண்ணன் தம்பி யாமிரண்டு பேரு- தண்ட
காரண்யம் வசிக்குமெல்லை காரணந்தெ ரிதற்கில்லை
ஆணாப் பிறந்தவர்கள் நேரு- சென்றாங்கு சீதை
யாமொருபெண் ணாளழகைப் பாரு

இராவணன்.

சீதைப்பெண்ணென்றொருவள் ஆங்கு- வனத்திருந்து
சிறக்க வசிப்பதென்ன பாங்கு- அந்தச்
சின்னவர் சிறு மானுடர்க் கென்ன நீ புரிந்த விடர்
செய்தார் உனக்கிப்படித் தீங்கு- விபரமூற்றுந்
தெரியும்படி யுரைப்பா யீங்கு

சூர்ப்பணகி.

பொன்னு ரிளங்கொடியை இன்றே- நினக்குமணம்
புரிவித்துச் சேர்த்திடுவ மென்றே- எண்ணிப்
போனபோ தெனையடுத்து மானபங்க மாய்ப்பிடித்துப்
பொன்றும்படி துணித்தார் நன்றே- அவர்களிரு
புயத்தழகையுங் காண்பாய் சென்றே

இராவணன்.

காவலுனக்கே வைத்த வல்ல- வீராதிவீர
கரதூஷணரவரைக் கொல்ல- விலையாவென
காரணமிது பெரிய மாரண முயிர்க்குரிய
கண்ணுளச் சீதையெனைப் புல்ல- மனமுகந்து
கருதும் வழி சிறிது சொல்ல

சூர்ப்பணகி.

வந்தா ரொருங்குடன் திரண்டு- கரதூஷணர்
வகை யெழு சேனைபலங் கொண்டு- ராமன்
வைத்துளகோ தண்டத்தாலே சத்தியற்று மூண்டம்போலே
மாண்டார்கள் மண்மிசையு ருண்டு- தேவருங்கூட
வணங்குகின் றாரவரைக் கண்டு

இராவணன் மாரீசனிடஞ் சென்று சீதைமுன் மான் உருவமெடுத்துச் செல்லும்படி வேண்டிக்கொள்கிறான்.

இசைந்த சூலம் என்ற வர்ணமெட்டு.

உகந்த மேலா உயிரெனு மாமா உமைநாடி
உளந்த ளாடி உரைசெய வந்தே மொருசேதி
அகந்தை யாளர் அவரிரு மாந்தர் வனமீதே
அணங்கு சீதை அழகுடை யாளோ டுறவாகச்
சுகந்த மேவு சுகமொடு வாழ்வார் களிகூரத்
துணிந்து மானுத் தொடுவுருவாகித் தொடர்வாயேல்
தகுந்த காலம் சமய மறிந்து தனியாகத்
தயங்கு மானு டனைநனி கொண்டு வருவேனே

மாயமானைக் கண்ட சீதை அதைப் பிடித்துக் கொடுக்கும்படி ராமரை வேண்டுகிறுள்.

புள்ளிக் கலபமயிற் பாகன் என்ற மெட்டு.

சீதை.

துள்ளித் திரிகின்ற திம் மானே ஆகா
சொர்ன விக்ரகமெனத் தானே இதைச்
சொந்தமா கவேபற்றச் சிந்தையி லெண்ணமுற்ற
தூயா-எந்த-னேயா

ஸ்ரீராமர்.

உள்ளங் களிகொள்ளுது மாதே இதை
உற்றுற்றுப் பார்த்துணரும் போதே பின்னல்
ஓடிப்பி டிப்பதற்கே நாடுத வாவெனக்கே
உன்னி-யேவிற்-பன்னி

சீதை

நானிங்கி தோடு நிதங் கூடி எந்த
நாளும் மகிழ்ந்து விளை யாடி வர
நத்திக்கை யாற்பிடித்தல் இத்தரு யேகொடுத்தல்
நன்று-பையச்-சென்று

லக்ஷ்மணன்.

மானென்றிதை நினைத்தல் தீதே அண்ணு
மாய அரக்கர்கள் தஞ் சூதே இந்த
மண்ணிற் செயல்களவை எண்ணித் துணிதலெவை
மாட்டும்-நலங்-கூட்டும்

ஸ்ரீராம லக்ஷ்மணர் மானின்பின் சென்ற பின்னர் இராவணன் சந்நியாசி வேடந் தாங்கிச் சீதை யிடம் வருகிறான்.

பூமிமேச்சிடு மண்ணுமலை என்ற மெட்டு.

இராவணன்.

ஆரண்ய வாசிக ளாகவந்த நீங்கள்
ஆரம்மா-எந்த ஊரம்மா என்ன பேரம்மா- சற்றிங்
காண்ந்த மாவார்த்தை யாடுவதும் நல
மாகுமே-துயர்-போகுமே

சீதை.

வாரும் மகாமுனி மாதவரே தங்கள்
வாக்கியம்-நற்சிலாக்கியம்-எங்கள் பாக்கியம்- நாங்கள்
வாழ்வத யோத்தியூர் வந்த கார்யம் வன
வாசமே-தெய்வ-நேசமே

இராவணன்.

வாழ்விழந்து வன வாசம்புக்கு காலும்
வாச்சுதோ-சுகம்-போச்சுதோ-துய ராச்சுதோ- சிறு
மானுடர்க்கே இந்த வழமை மடமை பற்றி
வந்ததே-உலக-மிந்ததே

சீதை.

ஆளும் ஈசன் செயல் ஆகும் ஆனலவன்
அல்லது-எது-வல்லது-ஆய்ந்த சொல்லது- பெற்ற
அன்னை தந்தை வார்த்தை யாதரித் திங்குற
லாச்சுதே-புண்யம்-வாச்சுதே

இராவணன்.

காதல் பெற்று வந்த ம காளைராவணன் யான்
காணுவாய்-சுகம்பேணுவாய்-மன்றல்பூணுவாய்- சிறுவிற்
கையர் மானுடால் கால முற்று மிந்தக்
கவலையே-நீயோ-ரவலையே

சீதை.

நீது முற்றி வந்த தீப ராவ ணனே
செல்லடா-தூர-நில்லடா-நியாயமல்லடா- மான்பின்
சென்ற வீரர்க்கிந்தச் சேதி யெட்ட நின்னைத்
தேடுவார்-கொன்று-போடுவார்

இராவணன்.

சிங்கந்தன்னை முயல் சென்றுகொல்லுமாபோல்
செப்பினுய்-கனி ஒப்பினுய்-உயிர்-தப்பினுய்- நின்னைத்
தேரின்மீது வைத்துச் செய்ய லங்கை மூதூர்
செல்லுவேன்-பின்னர் புல்லுவேன

ஸ்ரீராமர் லக்ஷ்மணர் பர்ணசாலையோடு சீதையைக் காணுது நின்று மயங்குகின்றனர்.

பாதிராத்திரி வேளையில் வீட்டு என்ற வர்ணமெட்டு.

ஸ்ரீராமர்.

தம்பி லக்ஷ்மணு வருவ தாய்ந்துநீ
சாற்றியும்மேகே ளாது மான்பின்
தாவிச்சென்றேனப் போது எந்த
லையிலே யெழுத் தீது ஐயோ
சானகி தன்னைத் தான் பிரிந்துத
யங்கவும் வந்த தேது

லக்ஷ்மணன்

வம்பன் ராவணன் வந்துதா னிவ்வ
சை புரிந்தனன் என்று ஓர்வ
கை யுணர்ந்தனன் நன்று நாம்வ
ிய லங்கைக்குச் சென்று அவன்
வாழ்வு போக்கிவ ருகைமே லன்னை
வன்சிறை தவிர்த் தின்று

கிஷ்கிந்தா காண்டம்.

அநும சுக்ரீவர் ஸ்ரீராமர் லக்ஷ்மணரைக் கண்டு சரண் புகுதல்.

பாதிராத்திரி வேளையில் என்ற மெட்டு.

சுக்ரீவன்.

இராமச்சுக்ரவி ராஜபோஜவி
ராகவா நமஸ் காரம் கொண்டு
ரக்ஷிப்பது நின் பாரம் எம்மி
னத்தன் வாலிகொ டூரம் எடுத்
தின்ன தென்னவி யம்பிடத்தர
மின்றடுத்தன்பா தாரம்

ஸ்ரீராமர்.

மராமரத்தும காபலத்தவன்
வாலிக் கேனிந்தக் கேடு அவன்
வாழ் வொழித்தலென் பாடு மெய்வ
ருத்தமேன் விட்டுப் போடு தடை
மற்றென் கிட்கிந்தை மன்னன் நீயெந்தன்
வாக்யமே நினக் கீடு

சுந்தரகாண்டம்.

ஆஞ்சநேயர் கடல் தாண்டுதல்.

வெள்ளிமலையோத்த பலமேடை என்ற வர்ணமெட்டு.

மாருதிலங்கையின் திசை நோக்கி உடல்
மாபெரும் மயேந்திர முச்சி தாக்கி இந்த
மண்டலம சையச் சேஷன் தொண்டையும்பஞ் சாய்நெருக்க
மதித்தார் மலை மிதித்தார்

ராகவபூஜை மனதில் வாக்யம் சதா
ராமநாம காலக்ஷேப யோக்யம் வஞ்ச
ராவணன் தன் சேனைபடை யாவையும் மாளிகைகொள்ள
அழித்தார் கண்ணை விழித்தார்

கடல்கிழிந்து தத்தளித்து ஓட கதிர்
கண்டுதன் ரதத்தை விட்டுச் சாட எம
காலனும் உயிரைவிட நீலனும் நிமைசுருக்கக்
காய்ந்தார் லங்கை பாய்ந்தார்

மோதிரம் ஸ்ரீராமரிடம் பெற்று சீதை
முன்கொடுத்து வாழிசொல்ல உற்று திசை
மூவுலகில் ஒருலகு முட்டிய உபாதனைபோல்
மூண்டார் லங்கைக் கிணைந்தார்

மேகவெளி தென்முகமாய்ப் பாய ஆலம்
மேன்மைசேர் பர்வதமெல்லாம் சாய விசை
மின்னலுக்கோர் கோடிலக்ஷம் எண்ணிடாக் காதமகல
மீண்டார் விஸ்வம் நீண்டார்

லங்கையின் தென்வாசலிடம் வந்தார் தாரை
நேர்பட முகூர்த்தமுதல் தந்தார் அவள்
ரெத்தம் நார் மணிக்குடலை எத்திக்கரத் தால்பிடிங்கி
யெறிந்தார் கோபம் புரிந்தார்

அனுமார் லங்கையிற் சென்று சீதையைத்தேடுவது.

பொன்னுலவு சென்னிகுளம் என்ற வர்ணமெட்டு.

லங்கைஎழு நூறுகாதம் எங்கினும் மிகவிரைவாய்
நொந்திட அனுமன் விஸ்வம் பூண்டுமே கோபம்
நேர்ந்திட மனந்துடித்து மீண்டிமே எங்கும்
மாரிமாரியே சாரிசாரியாய் வீரியம்பெற நேரிலெங்கினும்
மங்கையர் ஜானகிபதம் காணவே திசை
எங்கிலும் தேடி நடந்தார் தோணவே

மலைநிகர் மாளிகை கூடம் வஜ்ஜிரத்தூணுப்பரிக்கை
மாமலை மதில்பளிங்கு மால்களும் ரெத்ன
மண்டபம் உஜிதசித்ர கால்களும் சென்று
மங்கைராக்ஷதர்தங்குகிறமனை எங்கினும்விழிசங்கைமேலிட
மாது ஸ்ரீசீதை முகத்தைக் காணவே அனு
மன்பலவிடங்கள் சென்று வேணவே

ராவணன் துயில் பள்ளியும் ராக்ஷசி வண்டோதரிதன்
நாகரெத்ன ஆரமதும் கண்டுமே நின்று
நாட்டமுடன் வீரமது கொண்டுமே மனம்
நாடிக்கூடியே மோடிமேலிட வாடித்தன்மன மாடிநின்றுமே
நாயகி சீதையலவே என்றுமே கிட்ட
நாடினார் அசோகவனம் சென்றுமே

சீதை தன் துயரைத் திரிசடையிடம் அசோக வனத்திலிருந்து முறையிடல்.

மலடிவயிற்று மகன்போலே என்ற வர்ணமெட்டு.

சீதை.

மாமதி வசிகர திரிசடையே என்
மனமது உருகுதே மெழுகெனவே முன்
பூபதி மன்னரைத் திருமுக தெரிசனம் புரிவேனோ

திரிசடை.

பார்வதிக்கிணை பெறும் ஜானகியே உன்
பலபல யோசனை போக்கிடுவாய் அவர்
சீர்கெட ராக்ஷதர் முடிஇட மடியுமே திகையாதே

சீதை.

லங்கையி லிருப்பேனென் றறிவாரோ உடன்
நேர்தனில் என்னிடம் வருவாரோ மன
சங்கையாய்ச் சிறைதவிர்த் திடுவாரோ கெதி எவ்வாறோ

திரிசடை.

தோகையுன் மனத்துய ராறிடவே லங்கைக்
கோத்தள மதில் கொடி ஏறிடவே வங்கைப்
பாதையில் நாதன்வில் மீறிடவே செங்கை பார்ப்பாயே

இராவணன் சீதையிடத்தில் வந்து தனதபிப்பி ராயத்தை வெளியிடுதல்.

மருவேசெறித்த குழலார் என்ற வர்ணமெட்டு.

மயிலே உனக்கென் மனமே மிகுத்து
மலரேதொடுத்து னடிமீது
மனமேநலித்து மலிவேமிகுத்து
மகிழ்வாகவந்த எனைக்காராய்
தயவேமிகுத்து அடியேனை ரெக்ஷி
சரமாடுபாணம் சகியேனே
ததியேகொடுத்து எனைக்கார்விழித்து
ஜனராஜபுத்ரி தவமானே
ஒயிலேஉனக்கு உலகாளும்பட்டம்
உடனேகொடுத்துன் னுளம்வாழ்க
கயிலாயமுற்றும் கனமேமிகுக்கக்
கனவாழ்வுனக்குத் தருவேனே
திருமாலெதிர்க்க முடியாதுதிர
திரமேஇருக்கென் சிரமாட்டப்
பெருமாமலைக்கு னுறவாகிக்கிட்டிப்
பிரியாத ப்ரியம் தருவாயே

சீதை ஒரு துரும்பைப் பார்த்த வண்ணமாய் இராவணனை இகழ்ந்து பேசுதல்.

மலடிவயிற்று மகன்போலே என்ற மெட்டு.

வாயுரை விடடா ராவணனே உன்
வாழ்வு போக்காதே கேவலனே முன்
நாயினும் கடையா ராக்ஷதனே தூர நடடாநீ
மீக்ஷியாய் கர்வம்கொள்ளாதே அடா
மெல்லியர் சாபம் பொல்லாதே தெய்வ
சாக்ஷியாய்ச் சொன்னேன் துள்ளாதே சாபம் பொல்லாதே

ஸ்ரீராமரின் பாதம் பிடித்திடடா போய்
நண்ணிய மொழிப்படி அடுத்திடடா எனை
மாமரியாதை சொல் தொடுத்திடடா அடே மதிகேடா

பெண்டுடன் அணிபடை சேய்முதல் மாளப்
பெருமணி மகுடம் மம்தையும் தாளத்
தண்டுடன் ரதகஜம் தாழ்ந்துடன் வீழத் தரைமீது

மங்கைவண்டோதரி புலம்பிடவே நாய்
வந்துஉன்தலைதனை இழுத்திடவே ராமர்
செங்கையில் கணைமிகத்தொடுத்திடவே நாளைத் தெரிவாயே

சீதையைத் தேடுமிடத்தில் நித்திரையிலிருந்த ராவணனைக்கண்டு அநுமார் கோபித்தல்.

வெள்ளிமலை யோத்தபல மேடை என்ற வர்ணமெட்டு.

பத்துத்தலைப் பூச்சிவனைக் கண்டு விட்டுப்
பக்கமதில் போவேனோ நான் விண்டு இந்தப்
பாரறியப் பாவிஉயிர் வேரறவே இச்சமயம்
பழியே கொள்வேன் வழியே

சீதையைச் சிறையில்வைத்த பாவி இவனைச்
சித்ரவதை செய்வேனிப்போத் தாவி நொடி
சேர்ந்திட நகரத்திடை ஆழ்ந்திட என் வாலில் கட்டிச்
சிதைப்பேன் இங்கு வதைப்பேன்

பத்துத்தலை கைப்பிடித்துத் தூக்கி ஒரு
பம்பரம்போல் பூமிதனில் தாக்கி இவனைப்
பஞ்சுபோல் பறக்கவிட அஞ்சுவனோ நானினிமேல்
பார்ப்பேன் கோபம் தீர்ப்பேன்

காலனுக்குபகாரமாய்ப் போகும் கொன்றால்
காகுத்தர் கைப்பாணம் கோப மாகும் தாயைக்
கண்டுசென்றுவாழிதந்து நின்றுதொழநேர்ந்தினிப்பின்
காண்பேன் களி பூண்பேன்

அனுமார் சீதையைக் கண்டு கணையாழியைக் கொடுத்தல்.

பூமிமெச்சிடு மண்ணுமலைக் கோர்துணை என்ற வர்ணமெட்டு.

அஞ்சவேண்டாம் வந்தேன் தஞ்சமுன் பாதமே அம்மையே
இனி நன்மையே தண்ட மென்மையே ராமர்
அன்புறும் தூதுவன் ஆஞ்சநேயன் என் பேர்
பன்மையே பாலன் சொன்மையே

தென்கடல் ஓரமாய்ச் சுக்ரீவர் இளையவர் சேனையும்
சுவாமி கோனையும் வெகு யானையும் கிட்டிச்
சேதுக்கரை யுற்றார் ஏதுக்கிரங்குறீர்
சேர்வையே கையில் ஏர்வையே

ராகவர் கையடை யாளக்கணையாழி காணுமே
கரம்பூணுமே தந்தேன் நானுமே இதைக்
கண்டு மகிழ்ந்து நீர் கொண்டு களித்திடும்
தானுமே புகழ் தோணுமே

சீதை ராகவன் மோதிரத்தைக் கண்டு மகிழ்தல்.

கண்ணுயிரம்படைத்த விண்ணோரிடந்தரித்த என்ற மெட்டு.

தேவர் முனிவர் தொழும் ராகவர் அடையாளம்
தேவி என்கண்ணுற ஆவிமகிழ்ந்தேனே சேர்வையே வனம்
சென்ற என்கணவனின் திருமுகதெரிசனம் ஏர்வையே

மானைத்தொடர்ந்தஎன் மன்னவர் திருமுகம்
மங்கை என்கண்ணுற மோதிரம்கண்டதும் மகிழாச்சே ராமர்
வருகுவார் ராவணன் முடியறத் துணிசெய இதுசாட்சே

கண்ட என்கலிதீரக் கொண்டது மோதிரம்
கண்ணில் என்மனமதில் எண்ணியபடிவரக் காலமே கெட்ட
கசடர்கள் ராக்ஷதர் உயிர்கொள ராமரே ஆலமே

மனமகிழ் மாருதி கனமுடன் வாழ்கநீ
மண்டலமிசைதனில் எண்டிசை வாழ்த்தவேமண் போற்ற நாளும்
வாலவிநோத சிரஞ்சீவி நீர்என வான் ஏற்ற

அனுமார் சீதைக்குத் தைரியம் கூறல்.

சொந்திசரிய மயிரே வெளிறநிரை என்ற வர்ணமெட்டு.

எட்டது நாள்கழிய மனத்துயரம்
பட்டது விலகுமம்மா பயமிலது
துட்டனின் முடிதுணியும் இனி உமக்குச் சுகமாமே
மலர்தலை வண்டோதரி யவிழ்த்தழுக
மமதையுள் ராவணன் முடிகளும் சிதற
பலர்உனை ராக்ஷதர் பணிவிடை புரிய பகலேழே
லங்கையில் பிணமலையே சிதறவெளி
ரெத்தமும் கடல் அலையே மனதுகளி
மங்கையில் திருச்சடையாள் அவள்தவிர மடிவாரே
உத்திரவெனக்களிப்பீர் சுவாமியிடம்
முத்திரை யளித்திடவே முனேவுடனே
பத்தினி விடைதருவீர் பணிவேனெனப் பாய்ந்தாரே

அனுமார் இந்திரஜித்தோடு போர்புரிதல்.

ஓரடிப்பதம்.

பல்லவி.

ஆஞ்சினன் மகிழ்கொண்டார் இந்திரஜித்தை
அமுக்கியோரிடியுந் தந்தார்

அநுபல்லவி.

பாய்ந்திட அரக்கர்மேல் பருவதம்போல் வீழ்ந்து
சாய்ந்திட மலைகையால் தாங்கிய வனமேல் ஆழ்ந்து (ஆ)

சரணம் முடுகு.

1 இடிமின்னல் குமுறுபோல அடியுண்ண அவன்மேலே
லங்கை அரக்கரெல்லாம் பங்கமிகப்படவே
சங்காதி சங்கமென தங்காதணிகள்வரச்
சிங்காதி சிங்கமென மங்காதனுமனுமே
மரமுதல் மலைகளை வாரிஎறிந்துமே
சரசரவெனப் பாணம் விரசுடனேவிட
அரசு அணிபடைகள் நிரசனுடன்மடிய
உரமுள சூரர்கள் உயிர் எமபுரச்செல (ஆ)

2 அடர்ந்து அடர்ந்து எட்டி ஆர்ப்பாரமிகக்கொட்டி
தொடர்ந்து தொடர்ந்து வெட்டி தூக்கி ஆகாயம்நெட்டி
வாலில் இருகக்கட்டி வதைத்தது மிகநட்டி
காலில் அநேகர்தட்டி கடிநரகமுறஎட்டி
காக்கை கழுநரிகள் பார்க்கப் பிணங்களையே
சேர்க்கப்பிடுங்கித்தின்ன நோக்க இரத்தவெள்ளம்
புரண்டு திரண்டு லங்கை மிரண்டு அரண்டழுகப்
புலிகண்டசெம்மரிபோல் கெலிகொண்டானிந்திரஜித்து (ஆ)

ஆஞ்சநேயரை ராவணன் கண்டு ஆர்ப்பரிப்பது.

என்னடி நான்பெற்றமங்கை என்ற வர்ணமெட்டு.

காட்டுக்குரங்கே நீ வாடா வழிகாட்டிய தாரடா மூடா க்ஷணம்
காண்பித்தா லப்புறம் போடா உன்னைக்
கடுகாகிலும் விடுகேனினி ஜகமாமுக வடிவேலனும்
கண்டுவா வென்று சொன்னானோ இல்லை
காவல் தப்பி வந்ததேனோ

தேவர்கள் தாழ்சிரம்கொள்வார் பக்தியுள்வார் பயமுள்வார் நாளும்
சித்தங்கலங்கியே விள்வார் கோட்டை
சிகரக்கொடி மகரக்கடல் அதையுற்றுப்பின் அசோகத்திடை
சென்ற தெவ்வாறடா குரங்கே அதைச்
செப்பிவிட்டோடிநீ உறங்கே

விள்வதைக் கேளடா மந்தி காவல்பிந்தி நீயும் முந்தி-வர
விண்டதுயாரடா தந்தி அதை
விரைவாகவே உரையாவிடில் இரையாகுவாய் தரைமேலிதோ
வெட்டுவேன் கட்கம் கை பாராய் இங்கே
வந்ததை என்னிடம் கூறாய்

ராவணனுக்கு அநுமார் புத்தி கூறுதல்.

வெள்ளிமலையொத்தலை மேடை என்றவர்ணமெட்டு.

ராமசாமி தூதனடா பயலே லங்கை
நாடிவந்தேன் உன்னிடத்தில் மூடபயலே கெட்டி
நாசமுறக்காலமிட்டு லேசிலே யிருக்குதடா
நாளை வரும் வேளை

175897

சென்று வந்தேன் லங்கைதனைப் பார்க்க உந்தன்
தேசமே பிணமலைகள் தூர்க்க இன்று
சேனைமுதல் யானைபரி வாரமே நொரிக்கிடநான்
செய்வேன்-மன-முய்வேன்

ஜானகி சிறைபடச்செய் தவனே பத்து
சாய்ந்த உன்தலை மண்விழும் சவனே நாளை
தக்கபடி லங்கைதனில் மிக்கதோர் அக்ரோணிவரத்
தடையா-இல்லை-மடையா

ஜானகியை விட்டுச் சரண் புகடா ராமன்
சார்படியைத் தோத்தரித்துத் தொடடா வீணில்
சந்ததியை நீயிழந்து அந்திரமாய் நின்றழுவாய்
சதியா-கெட்ட-மதியா

தங்கை மூக் கறுந்தும் புத்தி யிலையா அந்த
சங்கதியும் வெட்கமடா புலையா வாலி
தத்துவத்தில் கோடி ஒன்று ஒத்திருக்கோ உந்தனுக்கு
சாய்ந்தான்-அவனும்-மாய்ந்தான்

புத்திமதி கேளடா ராவணனே உனக்குப்
புல்புடுங்கச் செயலில்லை சீவனே என்தாய்
புண்யவதி சாபமது பூந்ததுன்னுடலில்டா
போடா-அடே-மூடா

அனுமார் வாலினாற் சிம்மாசனமிட்டு அதில் வீற்றிருக்க ராவணன் கண்டு ஆர்ப்பரிப்பது.

சோமனே காமனே என்ற ஜாவளி மெட்டு.

பல்லவி.

என்னடா குரங்கே என்முன் நன்னய சிம்மாசனங்கள்
இட்டெதிர் இருக்க நீயு மிணையோடா (என்)

சரணம்.

முன்னவன் ஈசன் முதலாய் எண்ணியே நடுங்கிடுவார்
கண்ணெதிர் க்ஷணப்பொழுதில் கட்சமுற்றுனைச்சிதைப்பேன்
சொன்னசொல் தவறேனடா துண்டுசெய்வே னுந்தனையே
தன் என அகம்பவித்த தடித்தனப் பயலேகேள் (என்)

ஈசுரன் பிர்மா விஷ்ணுவும் வாசலில் பணிகள் செய்ய
ஏகச்சக்ராதிபதி யென்றனைப் பணிய
மீசுரமால் தேவரெல்லாம் ஆசிகள் அநந்தமிட
மேட்டிமைசேர்என்னிடத்தில் நீட்டியவாலைத்துணிப்பேன் ()

தேவர்கள் வெஞ்சாமரிக்கத் தேவி பார்வதியுமாடித்
தென்னவன் மத்தளமிட்டுச் சதிர்செய்யச்
செங்கமலத் தாதியெனப் பங்கமிலா லெக்ஷிமியும்
அங்கமே பயந்து அவள் மங்கியே பணியத்தினம் (என்)

திக்குவிஜயம் புரிந்த தக்கதோர் ராவணேஸ்பரன்
திரமுடன் நான் பெயர்த்தேன் கயிலைமலை
கொக்கெதிர்த்து ராஜாளியைக் கூடுமோ ஜெயிக்கவடா
கோதண்ட ராமனெனக்குக் கோடிகண்ட பூனையடா (என்)

அநுமார் ராவணனுக்கு மறுபடியும் புத்தி கூறல்.

வண்ணத்தினைமாவைத் தெள்ளியே என்ற மெட்டு.

ராம தூதனடா பயலே அடா
நான் அனுமனடா முயலே புலி
லங்கையில் வந்தனடா செயலே சிங்கம்
நானுந்தனை வதைசெய்திட வேணும்தடை யினியிங்கில்லை
நாக்கறுப்பேனடா நாயே ராம
சாமி தூதனடா பேயே

வாழ்வும் மகிழ்ச்சியும் தோற்கிறாய் க்ஷணம்
வாசல் நமன் வரப் பார்க்கிறாய் மகா
வல்லபமுற்றும் என் தாக்கிறாய் உந்தன்
மணிமார்பினில் சரமேவிட பணிமாதர்கள் மனமேசுட
மங்கை வண்டோதரி புலம்ப லங்கை
வானமட்டும் ரத்தம் தளம்ப

காக்கை கழு பருந்தாகவே லங்கை
காணுமிடமெலா மேகவே கோட்டை
காவலர் முற்றிலும் சாகவே உன்னைக்
கலைகண்டுமே தனியாய்மனம் மலைகொண்டுறும் பனிபோலுயிர்
காகுத்தர் பாணமே கொல்லும் நாளை
கண்ட துண்டமாக மெல்லும்

மடமயில் சீதையை விடடா ராம
மந்திரம் உன்மனம் தொடடா புத்தி
மார்க்கமென்றெண்ணுவாய் அடடா லங்கை
மண்ணுகிடத் தூள்செய்துமே கண்ணுறநீ பாழ்ஙாதுமே
மாடகூட மிடித் தொடைக்கப் படை
வந்திடுமக்ஷோணி புடைக்க

தூதுவந்த அநுமாரைக் கொல்ல லாகாதென்று
ராவணனுக்கு விபீஷணர் புத்தி கூறல.

பூமிமேச்சிடு மண்ணுமலைக்கோர் என்ற மெட்டு.

குரங்கைக் கொல்வேனென்று சபதம்செய்வதென்ன கூடுமோ
புகழ் நீடுமோ மகிழ் பாடுமோ ராமன்
கூட்டியனுப்பிய தூதனைக் கொன்றதாய்
நாடுமோ நலம் தேடுமோ

துஜங்கட்டும் கீர்த்திக்கழிவுகள் தேடினீர் துன்பமே
விட்டால் இன்பமே ராமன் சிம்மமே அண்ணு
துக்கமே லங்கையில் மிக்கவே நேர்ந்திடும்
சொன்னனே கேட்பாய் அண்ணனே

தங்கை மூக்கறுத்துப் பங்கமே செய்தவர் சாற்றினேன்
உனைப்போன்றினேன் புத்தி யேற்றினேன் ராமன்
சாமானியமென்று கடுகும் நினையாதே
சத்தியம் சொன்னேன் நித்தியம்

உத்தமி சீதையைப் பற்றி நீ வந்தது ஒட்டுமோ
நாளும் கிட்டுமோ உனக்கெட்டுமோ தூதன்
ஒருவனால் லங்கையர் மூளிகளானது
ஒன்றுமே போதும் இன்றுமே

குரங்கையும் நீ விட்டு ராமனின் சேவையைக் கோருவாய்
ஓடி சேருவாய் கோபம் ஆறுவாய் என்றும்
குறைவில்லாச் செல்வனாய் லங்கையை எந்நாளும்
ஆளுவாய் மீறில் மாளுவாய்

ராவணன் விபீஷணரைக் கோபித்தல்.

ஆறுமுகவடி வேலவனே என்ற மெட்டு.

என்னடா தம்பி விபீஷணு உன்மதி
என்னிடம் நீ யுரைத்தாய் காட்டில்
ஏகாங்கியானதோர் சன்யாசி ராமனை
ஏற்றிப் புகழ் தொடுத்தாய்
மானிடன் செத்தைத் துரும்பென ராமன்
மதிப்புற என்மனதில் நீயும்
வீணிடவார்த்தைகள் பேசிப் பயந்த
விபரமென்சொல் கணத்தில்
கயிலையைப் பெயர்த்த என் புஜபல வீரம்
கனைக்குமோ நீ யறிந்தும் அந்தக்
கவலைஏன் என்னிடம் ராமன் தவளையே
காரணஞ்சொல் தெரிந்தும்
காட்டுக் குரங்கைத் துணைகொண்ட ராமன்
கடும்பகை என்ன செய்யும் சிங்கம்
ஆட்டுக்கு அஞ்சி நரியை அடுத்த
பழமொழிக்கென்ன உய்யும்
பூனையைக் கண்டு புலி தெண்டமிட்ட
புதுமைபோலுன் வார்த்தை கோடி
யானையை நெஞ்சில் அசைத்த புஜபல
ஆண்மை என்னேர் பார்த்தை
போடா விபீஷணு கண்ணெதிர் நில்லாதே
புத்தியில் தீர்ந்தவண்டா ராமன்
ஈடாக வைத்து எனக்கிணை பேசினை
நீயுமே சேர்ந்தவண்டா

அனுமார் வாலில் தீயிடும்படி ராவணன் தூதர்களுக்கு உத்தரவளித்தல்.

பாளைவாய் கழுகில்வந்தூர் என்ற வர்ணமெட்டு.

நின்றிடும் கருங்குரங்கை நேர்தனில் வாலை யிழுத்து
நீட்டியே திரிகள் கட்டி சுற்றியே இதை
வாட்டியே புடைக்கவேண்டும் எற்றியே

பஞ்சசேனாதிபதிகள் அக்ஷதன் அணிபடையைப்
பக்ஷணம் செய்த குரங்கைப் பாரடா இதை
இக்ஷணம் மடிக்கவேண்டும் நேரடா

சித்ரவதை செய்திடக்கண் சீர்பட மகிழவேண்டும்
சீக்கிரந் திரிகயிறு எண்ணெயும் சுற்றித்
தீயிட நான்பார்க்க வேண்டும் முன்னையும்

இக்குரங்கை விட்டுவிட்டால் யாவரும்இகழ்வார் என்னை
இப்புவியில் கீர்த்திகெட்டுப் போகுமே உடன்
செப்புமென்மொழிபோல் செய்தால் வேகுமே

அநுமார் வாலில் துணிகளைச்சுற்றி நெருப்புவைக்க அவர் லங்கையைக் கொழுத்துதல்.

பொன்னுலவு சென்னிகுள என்ற மெட்டு.

பற்றியே எரியலங்கை முற்றிலும் அனுமான் தீயைப்
பந்துபந் தாய் வாலில் நின்று சுற்றியே எங்கும்
சந்துபொந்தும் வெந்தணலால் எற்றியே சபை

மாடமாளிகை கூடகோபுரம் நாடமேல் அனல் சாடஉற்றவர்
வந்ததேமன் என்று சொல்வார் மங்கியே பெண்கள்
மன்னனை அணைத்தழுவார் பொங்கியே

தங்கமதில் கோபுரமோ டெங்கிலும் சிம்மாசனமும்
சப்ரமஞ்சம் உப்பரிக்கை மால்களும் பரி
தாங்கவெண்ணு யானையும் கா லாட்களும் புகை

சப்தமேகமென் சித்தம் கிளைவிட மெத்த ஒளிவுடன் பற்றிவேகவே
சார்ந்ததை அனுமன்கண்டு தாண்டியே கண்ணில்
வாய்ந்ததைத் தகித்து விட்டார் தாண்டியே

கண்டவர் ஜீவனைவிட்டுக் கப்பெனஉயிர் துறக்கக்
கன்னிகை பெண்டு பிள்ளைகள் வாடியே நாடி
கட்டுவார் எதிர்பட முன் ஓடியே கெட்ட

காலம் வந்தது மாளலங்கையில் மீளஇடமிலே தாளோமினிஎனக்
கண்ஜலம் தாரையொழுகக் கத்துவார் இடை
கந்தலையவிழ்த்தெறிந்து சுத்துவார்

பெற்றதன் சிசுவைச்சிலர் எட்டியே எறிந்திடுவார்
பெண்டுகளை விட்டுச் சிலர் ஓடுவார் எங்கும்
அண்டையில் அனல்வதையால் சாடுவார் லங்கை

போச்சுதே என்பேச்சு மீறிடத் தாட்சியாய் அழப் பூச்சிபோல்விழப்
போவதெங்கே என்று நின்று மீளுவார் கூடிச்
சாவதை நிட்சயம் செய்து மாளுவார்

சீதைவாழ் அசோகவனச் சித்திரமாளிகையைவிட்டுச்
சேதமே லங்கை தகன மாச்சுதே இது
நீதமல்ல என்றழுக லாச்சுதே விதி

நேர்ந்ததோவென ஏர்ந்தவர்சொல பாய்ந்த மாருதி வாய்ந்தபுகழுற
நின்றரே ராவணன் முகம் தாழவே சீதை
இன்றலோ மகிழ்ந்தாள் அன்பு மீளவே

அநுமார் லங்கையைத் தகனம் பண்ணி, ஸ்ரீராமரிடம் வந்து சீதையின் நிலைமை உரைத்தல்.

வெள்ளிமலையோத்தபல மேடை என்ற வர்ணமெட்டு.

கண்டுவந்தேன் கண்டுவந்தேன் ராகவா சீதை
கந்தமலர் சேவை கண்டேன் யோகவா லங்கைக்
காதக ராவணன் கோட்டை பாதகன் அசோகவனம்
கண்டேன் மகிழ் கொண்டேன்

சுற்றிலும் அரக்கியர்கள் காவல் அம்பாள்
சொல்லறிந்து வேணசெய்வார் ஏவல் லக்ஷ்மி
சுந்தரி ஜானகிமெய் மகிழ்ந்திடத் தங்கள்வரவு
சொற்றேன் ஜெய முற்றேன்

லங்கைமுற்றும் ஓடி எங்கும் சென்றேன் கண்ணால்
நேர்புறும் ராமஸ்மரணை கண்டேன் பக்கம்
நின்றபெண் திருச்சடைமுன் அண்டையில் பணிசெய்வது
நேர்மை வெகு கூர்மை

தன்னுயிரைப் போக்கமன மெண்ணி மாதா
தான் நடக்கப் பக்கமதில் நண்ணி செல்ல
தக்ஷணம் அநுமனென நிச்சயம் புரிந்து யாழி
தந்தேன் போற்றி நின்றேன்

மோதிரம் கண்டவுடனே மகிழ்ந்தார் பெற்று
முத்தமிட்டுக் கண்ணிலொற்றி நகைகந்தார் சுவாமி
முத்தொளி திருமுகத்தைச் சித்தமதிலே நினைந்து
மூர்ச்சார் பின்பு பூர்ச்சார்
கொண்டுவந்தேன் சிதைகணை யாழியே பெற்றுக்
கொண்டணைத்து நீர்மகிழின் நாழியே லங்கை
கூடியே ராவணன்சிரம் ஆடியே அறுந்துவிழக்
கூடும் இனி நாடும்

விருத்தம்.

மாருதி யுரைத்த மாற்றம் மகிழ்வுடன் கேட்டு ராமன்
சிரிய தம்பி யோடும் சேர்ந்தசுக் ரீவ னோடும்
சாருதென் திசையிற்சென்று சமுத்திர மணையாக்கட்டிப்
பாரிய லங்கை மூதூர் பக்கமுற் றடுத்தன் மாதோ.
அடுத்தன னுண்மை மிக்க அங்கதன் தன்னை யேவி
விடுத்தனன் தூதுசெப்ப வெகுண்டரா வணனுங்கேளாத்
தொடுத்தனன் வன்போரம்மதொகையிலா தரக்கரோடும்
எடுத்தவிற் படைகள் சூழ இந்திர சித்தாங் குற்றான்.
உற்றஅன் னவனைச்சீறி உகந்தலக்ஷ் மணனே கொன்றான்
மற்றுறு கும்ப கர்ணன் மாண்டனன் மாளா ரில்லை
பற்றிய சேனை யோடும் பரிமுதற் படைக ளோடும்
கொற்றரா வணனை ராமன் கோதண்டங் கொன்ற தம்ம
தென்னக ரிலங்கை வேந்தாச் சீர்த்தவி பீஷணற்கு
மன்னிய மகுடஞ் சூட்டி மகிழ்வுறச் செய்து ராமன்
பொன்னிதற் சிறையை மீட்டிப் போதவ யோத்திவந்து
தன்னையும் மகுடஞ் சூட்டத் தனியர சாண்டான் மன்னே

வாழி விருத்தம்.

மாதவர் வாழ்க நீதி மன்னர் வாழ்க பொன்றாச்
சீதமா மாரி பெய்து தேசமுஞ் செழித்து வாழ்க
... கொண்ட எங்கள்கோ பாலகிருஷ்ண
... தவன் வாழ்க ... டாங் கரும்பெரும் புதல்வர் பெற்றே

இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து.

முற்றிற்று.

125897